aglasem.com

FOR AP CLASS 10 EXAM PREPARATION

AP Class 10 2027 Model Paper · Tamil First Language

EXAM	YEAR	TYPE	SUBJECT
AP Class 10	2027	Model Paper	Tamil First Language

BLUE PRINT & MODEL PAPERS OF SSC PUBLIC EXAMINATIONS FOR THE ACADEMIC YEAR 2026 – 2027

BY THE DIRECTOR OF GOVERNMENT EXAMINATIONS (SSC BOARD), A . P. 01A & 02A

S.S.C. EXAMINATIONS – TAMIL (FIRST LANGUAGE)

BLUE PRINT FOR MODEL PAPER – 2026 – 2027

SUBJECT : TAMIL (FIRST LANGUAGE) MAX.MARKS : 100 TIME : 3 Hrs 15 Min

I.கல்வித்திறன்கள் ஒதுக்கீடு அட்டவணை

வரிசை எண்	கல்வித்திறன்கள்	மதிப்பெண்	சதவிகிதம்
1.	புரிந்துகொள்ளுதல்	60	60%
2.	உணர்திறன்	20	20%
3.	படைப்பாற்றல்	20	20%
	மொத்தம்	100	100%

II.பாடப்பொருள் ஒதுக்கீடு அட்டவணை

வரிசை எண்	பாடப்பொருள்	மதிப்பெண்	சதவிகிதம்
1	செய்யுள்	20	20%
2	உரைநடை	20	20%
3	துணைப்பாடம்	20	20%
4	செய்யுள், உரைநடை பகுதி படைப்பாற்றல் வினா	08	08%
5	மொழித்திறன்	32	32%
	மொத்தம்	100	100%

III.வினாவகை ஒதுக்கீடு அட்டவணை

வரிசை எண்	வினாவகை	வினாக்களின் எண்ணிக்கை	மதிப்பெண்	மொத்த மதிப்பெண்	சதவிகிதம்
1.	நெடுவினா	07	08	56	56%
2.	சிறுவினா	03	04	12	12%
3.	குறுவினா	09	02	18	18%
4.	புறவயவினா	14	01	14	14%
	மொத்தம்	33		100	100%

IV. 10 வகுப்பு – தமிழ் (முதன்மை மொழி) வினாத்தாள் திட்டவரைவு

2026 - 2027 (01A & 02A)

வ. எ ண்	பாடப் பொருள்	புரிந்து கொள்ளுதல் 60 மதிப்பெண்				உணர் திறன் 20 ம		படைப் பாற்றல் 20 மதிப்பெண்		மொத்தம் 100 மதிப்பெண்			
		நெ வி	சி வி	கு வி	பு வி	நெ வி	கு வி	நெ வி	கு வி	நெ வி	சி வி	கு வி	பு வி
1.	செய்யுள்	1 (8)	1 (4)	-----	----	1 (8)	----	-----	-----	2 (8)	1 (4)	-----	----
2.	உரைநடை	1 (8)	1 (4)	-----	----	1 (8)	-----	-----	-----	2 (8)	1 (4)	-----	----
3.	துணைப் பாடம்	1 (8)	1 (4)	-----	----	-----	-----	1 (8)	-----	2 (8)	1 (4)	-----	----
4.	செய்யுள்/ உரைநடை படைப் பாற்றல் வினா	---	-----	-----	----	------	-----	1 (8)	-----	1 (8)	-----	-----	----
5.	மொழித் திறன்	------	-----	5 (2)	14 (1)	-----	2 (2)	-----	2 (2)	-----	-----	9 (2)	14 (1)
	மொத்தம்	24	12	10	14	16	4	16	4	56	12	18	14
		60				20		20		100			

- அடைப்புக்குள் இருக்கும் எண் மதிப்பெண்ணையும், வெளியே இருக்கும் எண் வினாவையும் குறிக்கிறது.

aglasem.com For more Question Papers, Sample Papers, Notes & Syllabus visit aglasem.com

V.வினாவகை விளக்க அட்டவணை –தமிழ் (முதன்மை மொழி)

வரிசை எண்	கல்வித் திறன்கள்	வினா எண்	வினா வடிவம்	மதிப் பெண்	வினா வகை	வினாத்தன்மை
I.	புரிந்து கொள்ளுதல்	1.	செய்யுள் – பதவுரை,கருத்துரை எழுதுக. (உள்விருப்பத் தெரிவு உள்ளது.)	8 ம	நெடு வினா	மனப்பாட செய்யுள் பகுதியிலிருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		2.	அறிந்த உரைநடை பத்தி-வினாக்கள்	8 ம	நெடு வினா	உரைநடை பகுதியில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும். (விடைகள் வாக்கிய வடிவத்தில் மட்டுமே எழுத வேண்டும்.)
		3.	துணைப்பாட நிகழ்வுகளை வரிசைப்படுத்துக	8 ம	நெடு வினா	இயல் –6 மங்கையராய்ப் பிறப்பதற்கே.... (இந்த துணைப்பாடத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.)
		4.	ஆசிரியர்/ நூல் குறிப்பு	4 ம	சிறு வினா	செய்யுள் பகுதியிலிருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		5.	உரைநடை பாடப்பொருள்	4 ம	சிறு வினா	உரைநடை பகுதியிலிருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		6.	துணைப்பாட பண்புநலன்	4 ம	சிறு வினா	துணைப்பாட பகுதியிலிருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		7. (அ) (ஆ)	பொருளை காண் பொருளைக் காண்	1 ம 1 ம	குறு வினா	செய்யுள் பகுதியிலுள்ள சொல்லும் பொருளும் மட்டுமே கொடுக்கப்படும்.
		8. (அ) (ஆ)	பல பொருள் காண் இருபொருள் காண்.	1 ம 1 ம	குறு வினா	புத்தகம்/சுயமாக கொடுக்கப்படும்.
		9. (அ) (ஆ)	தொகைச்சொல் ஆங்கிலச் சொல்லுக்கு -	1 ம 1 ம	குறு வினா	புத்தகம்/ சுயமாக கொடுக்கப்படும்.

			நிகரான தமிழ்ச்சொல்			
		10.(அ)	இடம் (மூவிடம்)	1 ம	குறு வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		(ஆ)	வழு காண்	1 ம		
		11.(அ)	அகப்பொருள் காண்	1 ம	குறு வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		(ஆ)	புறப்பொருள் காண்	1 ம		
		12.	பிரித்து எழுதுக	1 ம	புறவய வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		13.	பகுபதம்	1 ம	புறவய வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		14.	பா – ஓசைகள்	1 ம	புறவய வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்
		15.	இலக்கணக் குறிப்பு - காண்	1 ம	புறவய வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்
		16.	இலக்கணக் குறிப்பு - காண்	1 ம	புறவய வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்
		17.	உடன்படு தொடரை எதிர்மறை தொடராக மாற்றுக	1 ம	புறவய வினா	புத்தகம்/சுயமாக மட்டுமே கொடுக்கப்படும்
		18.	தொகாநிலைத் தொடர்	1 ம	புறவய வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		19.	தொகைநிலைத் தொடர்	1 ம	புறவய வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்
		20.	கலவைத் தொடராக மாற்றுக.	1 ம	புறவய வினா	சுயமாக/புத்தகத்தில் இருந்து கொடுக்கப்படும்.
		21.	செய்வினை – செயப்பாட்டு வினை	1 ம	புறவய வினா	சுயமாக/புத்தகத்தில் இருந்து கொடுக்கப்படும்.
		22.	இரு சொற்களை தொடரில் அமைக்க	1 ம	புறவய வினா	சுயமாக/ புத்தகத்தில் இருந்து கொடுக்கப்படும்.
		23.	தொடர்	1 ம	புறவய வினா	சுயமாக/புத்தகத்தில் இருந்து கொடுக்கப்படும்.
		24.	தொடர்	1 ம	புறவய வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		25.	பழமொழியை	1 ம	புறவய	சுயமாக/புத்தகத்தில்

			நிறைவு செய்		வினா	இருந்து கொடுக்கப்படும்.
II.	உணர் திறன்	26.	செய்யுள் (உள்விருப்பத் தெரிவு உள்ளது)	8 ம	நெடு வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		27.	உரைநடை (உள்விருப்பத் தெரிவு உள்ளது)	8 ம	நெடு வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		28.	அணி	2 ம	குறு வினா	புத்தகத்தில் (திருக்குறள் பகுதி) இருந்து மட்டுமே கொடுக்கப்படும்
		29.	அலகிட்டு வாய்பாடு	2 ம	குறு வினா	புத்தகத்தில் (திருக்குறள் பகுதி) இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
III.	படைப் பாற்றல்	30.	கடிதம்/படிவம்/ கட்டுரை (உள்விருப்பத் தெரிவு உள்ளது)	8 ம	நெடு வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		31.	துணைப்பாடக் கதை	8 ம	நெடு வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		32.	மரபுச் சொல் – பொருள் எழுதுக.	2 ம	குறு வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.
		33.	உவமைத்தொடர்- வாக்கியம் அமைத்தல்.	2 ம	குறு வினா	புத்தகத்தில் இருந்து மட்டுமே கொடுக்கப்படும்.

BLUE PRINT & MODEL PAPERS OF SSC PUBLIC EXAMINATIONS FOR THE ACADEMIC YEAR – 2026 -2027

BY THE DIRECTOR OF GOVERNMENT EXAMINATIONS (SSC), A.P. 01A & 02A

TAMIL (FIRST LANGUAGE)

தமிழ் (முதன்மை மொழி)

மாதிரி வினாத்தாள் – 1 : 2026 – 2027

(MODEL QUESTION PAPER – 2026 – 2027)

காலம் : 3 ம 15 நி. **மொத்த மதிப்பெண் : 100**

மாணவர்களுக்கான குறிப்புகள் :

1.வினாத்தாள் மூன்று பகுதிகளாக உள்ளது.

2.வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்களும், விடைகளை எழுதுவதற்கு 3 மணி நேரமும் தரப்பட்டுள்ளது.

3.வினாக்களுக்கான விடைகளை, விடைத்தாளில் மட்டுமே எழுத வேண்டும்.

4.விடைகளை திருத்தமாகவும், தெளிவாகவும் எழுத வேண்டும்.

பகுதி – I

I.புரிந்து கொள்ளுதல் (60 மதிப்பெண்கள்)

1. கீழ்க்காணும் செய்யுளுக்கு பதவுரை, கருத்துரை எழுதுக. 8 ம

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!

இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே!நற்கணக்கே!

மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே !

(அல்லது)

அள்ளல் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ

வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்

கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ

நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

2.கீழ்க்காணும் உரைநடையைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி. **8 மதிப்பெண்**

இளமைப் பருவத்திலேயே தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகள் கலைஞரை ஈர்த்தன. பட்டுக்கோட்டை அழகிரி, அறிஞர் அண்ணா ஆகியோரின் பேச்சாற்றல் அவரைக் கவர்ந்தது. மேடைப்பேச்சினில் பெருவிருப்பம் கொண்ட அந்தக் கிராமத்து இளைஞர், 'நட்பு' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு பலராலும் பாராட்டப்பட்டது. பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்குப் பேச்சுப்பயிற்சி அளிப்பதற்காகச் 'சிறுவர் சீர்திருத்தச் சங்கம்' , 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' ஆகிய அமைப்புகளைத் தொடங்கினார்.

வினாக்கள் :

அ. கலைஞர் எத்தலைப்பில் பேசிய சொற்பொழிவை அனைவரும் பாராட்டினர்?

ஆ. கலைஞரைக் கவர்ந்த பேச்சாளர்களின் பெயர்களை எழுதுக?

இ. கலைஞர் மாணவர்களுக்காக தொடங்கிய அமைப்புகள் யாவை?

ஈ. கலைஞர், இளமைப் பருவத்தில் யாருடைய கருத்துகளால் ஈர்க்கப்பட்டார்?

3. கீழ்க்காணும் துணைப்பாட நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக. **8 மதிப்பெண்**

அ. கல்லூரி பருவத்தில் காந்தியச் சிந்தனையில் கவரப்பட்டார்.

ஆ. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் நாட்டின் விடுதலைக்கு முன்பு கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் போராடிக் கற்றார்.

இ. நாட்டின் விடுதலைக்குப் பின் கணவருடன் இணைந்து 'பூதான' இயக்கத்தில் பணிபுரிந்தார்.

ஈ. ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்கு பெற்றார்.

கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கு அல்லது ஐந்து வாக்கியங்களில் விடையளி. **3×4=12 மதிப்பெண்.**

4. அதிவீரராம பாண்டியர் - குறிப்பு எழுதுக?

5. பல்துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது?

6. 'இராமானுசர்' பண்பு நலனைக் குறித்து எழுதுக?

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. 5×2=10 மதிப்பெண்.

7.(அ). 'யாக்கையைப் பிணித்தென்று ஆக' 1 ம.

(அடிக்கோடிட்ட சொல்லிற்கு பொருளைக் காண்)

அ) உடம்பு. ஆ)யாசிப்பு. இ)வாசிப்பு. ஈ)பார்த்து

(ஆ.) நகு தார் வேந்தன் – (அடிக்கோடிட்ட சொல்லின் பொருளைக் காண். 1 ம

அ) மாலை ஆ) காலை இ) மகுடம் ஈ) வாள்

8. (அ.) 'அழகு' எனப் பொருள்தரும் பலசொற்களை எழுதுக. 1 ம

அ) முகில்,கொண்டல். ஆ)வனப்பு,எழில்

இ)தத்தை,கிள்ளை ஈ)பதுமை,பெதும்பை

(ஆ.)ஆழி என்பதன் இருபொருளைக் காண். 1 ம

அ) கடல், சக்கரம் ஆ) பரவை, சங்கு

இ) முந்நீர், வண்டி. ஈ) சமுத்திரம், நண்டு

9. (அ) 'முத்தமிழ்' - இத்தொகைச்சொல்லை விரித்துக்காண். 1 ம

அ) செம்மை,கன்னி,பசுமை ஆ)திருமகள்,கலைமகள்,மலைமகள்

இ) இயல், இசை, நாடகம் ஈ) முத்து,பவளம், வைரம்

(ஆ) 'PLAYWRIGHT' – எனும் ஆங்கிலச் சொல்லிற்கு நிகரான தமிழ்ச் சொல்லைக்காண். 1 ம

அ) கதைச்சொல்லி ஆ) திரைக்கதை

இ) நாடக ஆசிரியர் ஈ) இயக்கநர்

10. (அ) வந்தான் – இவ்வகை இடம். 1 ம

அ) படர்க்கை ஆ) முன்னிலை

இ) தன்மை ஈ) பொது

(ஆ) 'நேற்று வருவான்' என்பது எவ்வகை வழு ? காண். 1 ம

அ) திணை ஆ) பால்

இ) இடம். ஈ) காலம்

11. (அ) ஊடலும் ஊடல் நிமித்தமும்' என்பது இந்நிலத்தின் உரிப்பொருளாகும் ? 1 ம.

அ) குறிஞ்சி. ஆ)முல்லை. இ) மருதம். ஈ) நெய்தல்

(ஆ) இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணத்தைக் காண். 1 ம

அ) நாட்டைக் கைப்பற்றல். ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல். ஈ) கோட்டையை முற்றுகையிடல்

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. 5×1=5 மதிப்பெண்.

12. எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும் 1 ம

(அடிக்கோடிட்ட சொல்லைப் பிரித்துக்காண்)

அ)எந்+தமிழ்+நா. ஆ)எந்த+தமிழ்+நா

இ)எம்+தமிழ்+நா ஈ)எந்தம்+தமிழ்+நா

13.கிளர்ந்த' – இப்பகுபதத்தில் அமைந்துள்ள விகுதியைக் காண். 1 ம

அ) கிளர் ஆ) நம்

இ) அ ஈ) தன்

14.வஞ்சிப்பாவுக்கு உரிய ஓசையைக் காண். 1 ம

அ) தூங்கல் ஆ) துள்ளல்

இ) அகவல் ஈ) செப்பல்

15. வந்தவர் அவர்தான் – இச்சொல்லிற்கு இலக்கணக் குறிப்பு காண். 1 ம

அ)வினையாலணையும் பெயர். ஆ) வினைமுற்று

இ) வியங்கோள் வினைமுற்று. ஈ) வினையெச்சம்

16. வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை. 1 ம

(அடிக்கோடிட்ட சொல்லிற்கு இலக்கணக் குறிப்பு காண்)

அ) வினைத்தொகை ஆ) வியங்கோள் வினைமுற்று

இ) வினையெச்சம் ஈ) வினையாலணையும் பெயர்

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. 9×1=9 மதிப்பெண்.

17. 'கனிமொழி கட்டுரை எழுதினாள்' , - இத்தொடரை எதிர்மறைத் தொடராக மாற்றி எழுதுக. 1 ம

18. வடித்தகஞ்சியில் சேலையை அலசினேன்' – அடிக்கோடிட்ட சொற்றொடர் எவ்வகைத் தொகாநிலைத்தொடர் ? 1 ம

19. நன்மொழி' என்பது எவ்வகைத்தொகை? எழுதுக. 1 ம

20. அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார். 1 ம

(இத்தொடரைக் கலவைத்தொடராக மாற்றுக்)

21. 'மணிகண்டன் படம் வரைந்தான்' – இச்செய்வினைத் தொடர் எவ்வாறு செயப்பாட்டு வினைத்தொடராக மாறும் ? காண். 1 ம

22. இயற்கை – செயற்கை (கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.). 1 ம

23. உன்னால் படிக்க முடியாது...! என்பது எவ்வகைத்தொடர். 1 ம

24. ஓர் எழுவாயோ, பல எழுவாய்களோ இருந்து ஒரு பயனிலையை கொண்டு அமைவது எவ்வகைத் தொடர்? 1 ம

25. கீழ்க்காணும் பழமொழியை நிறைவு செய்க. 1 ம

உப்பில்லாப் _____

பகுதி – II

II.உணர்திறன். 20 மதிப்பெண்

கீழ்க்காணும் வினாக்களுக்கு எட்டு முதல் பத்து வாக்கியங்களில் விடையளி. 2×8=16 ம

26. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

(அல்லது)

கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற

உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

27. 'சங்க இலக்கியங்கள் காட்டும் அறம்' எனும் தலைப்பில் உன் கருத்துகளை எழுதுக.

(அல்லது)

காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. **2×2=4ம**

28. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்

கோலொடு நின்றான் இரவு.

(மேற்காணும் குறட்பாவில் இடம்பெறும் அணியைச்சுட்டி விளக்கம் தருக)

29. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து

தீதின்றி வந்த பொருள்.

(மேற்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு எழுதுக.)

பகுதி – III

III.படைப்பாற்றல். **20 மதிப்பெண்**

கீழ்க்காணும் வினாக்களுக்கு எட்டு முதல் பத்து வாக்கியங்களில் விடையளி. **2×8 = 16.**

30. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்கு கடிதம் எழுதுக.

(அல்லது)

'சான்றோர் வளர்த்த தமிழ்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

31. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விளக்குக.

(அல்லது)

‘பாய்ச்சல்’ கதையின் மையக்கருத்தைக் குறிப்பிட்டுக் கதையைச் சுருக்கி எழுதுக.

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. **2×2=4 மதிப்பெண்**

32. கண்ணும் கருத்தும் – இம்மரபுத் தொடருக்குப் பொருள் எழுதுக.

33. தாமரை இலை நீர்போல – இவ்வுவமைத் தொடரை வாக்கியத்தில் அமைக்கவும்.

BLUE PRINT & MODEL PAPERS OF SSC PUBLIC EXAMINATIONS FOR THE ACADEMIC YEAR – 2026 -2027

BY THE DIRECTOR OF GOVERNMENT EXAMINATIONS (SSC), A.P. 01A & 02A

TAMIL (FIRST LANGUAGE)

தமிழ் (முதன்மை மொழி)

மாதிரி வினாத்தாள் – 1 : 2026 – 2027

(MODEL QUESTION PAPER – 2026 – 2027)

காலம் : 3 ம 15 நி. **மொத்த மதிப்பெண் : 100**

மாணவர்களுக்கான குறிப்புகள் :

1.வினாத்தாள் மூன்று பகுதிகளாக உள்ளது.

2.வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்களும், விடைகளை எழுதுவதற்கு 3 மணி நேரமும் தரப்பட்டுள்ளது.

3.வினாக்களுக்கான விடைகளை, விடைத்தாளில் மட்டுமே எழுத வேண்டும்.

4.விடைகளை திருத்தமாகவும், தெளிவாகவும் எழுத வேண்டும்.

பகுதி – I

I.புரிந்து கொள்ளுதல் (60 மதிப்பெண்கள்)

1. கீழ்க்காணும் செய்யுளுக்கு பதவுரை, கருத்துரை எழுதுக. 8 ம

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்

கொண்டல்கண் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்

தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்

வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ

(அல்லது)

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!

முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே !

கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்

மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

2.கீழ்க்காணும் உரைநடையைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி. 8 மதிப்பெண்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906 ஆம் ஆண்டு, மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அவ்வாண்டில் வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இத்தகைய சிறப்புள்ள ஆண்டில் ஜூன் 26 ஆம் நாள், சென்னை ஆயிரம் விளக்கு வட்டம் சால்வன் குப்பம் என்னும் பகுதியில் மா. பொ. சிவஞானம் பிறந்தார். அவருடைய பெற்றோர் பொன்னுசாமி, சிவகாமி ஆவர். இவருடைய இயற்பெயர் ஞானபிரகாசம். ஆனால் சரபையர் என்ற முதியவர் இவரை 'சிவஞானி' என்று அழைத்தார். பின்னாளில் சிவஞானி என்னும் பெயரே சிறிது திருத்தத்துடன் சிவஞானம் என்று நிலைபெற்றது.

வினாக்கள் :

அ. ம.பொ.சிவஞானம் எப்போது, எங்கு பிறந்தார் ?

ஆ. சுதேசிக் கப்பல் நிறுவனத்தை, எப்போது யார் தொடங்கினார் ?

இ. ம.பொ.சிவஞானத்தின் இயற்பெயர் என்ன ?

ஈ. 'சிவஞானி' என்று பெயரிட்டவர் யார் ?

3. கீழ்க்காணும் துணைப்பாட நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக. 8 மதிப்பெண்.

அ. ஜவகர்லால் நேரு, சரோஜினி நாயுடு போன்ற பெரியோர் பாராட்டியதைப் பெருமையாகக் கருதினார்.

ஆ. மீரா திரைப்படம் மிகப்பெரிய வெற்றியை அவருக்குத் தந்தது.

இ. தனது பதினேழு வயதில் சென்னை மியூசிக் அகதெமியில் மேதைகள் பலர் முன்பு கச்சேரி செய்து பாராட்டைப் பெற்றார்.

ஈ. ஐந்தாம் வகுப்பு வரைதான் கல்வி பயிலும் வாய்ப்பு எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கு கிட்டியது.

கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கு அல்லது ஐந்து வாக்கியங்களில் விடையளி. 3×4=12 மதிப்பெண்.

4. பரிபாடல் - நூற்குறிப்பு எழுதுக ?

5. வாய்மை பற்றி சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கருத்துகளை எழுதுக ?

6. 'பூரணர்' பண்பு நலனைக் குறித்து எழுதுக ?

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. 5×2=10 மதிப்பெண்.

7. (அ) 'தண்பெயல்' தலைஇய ஊழியும்' 1 ம.

(அடிக்கோடிட்ட சொல்லிற்கு பொருளைக்காண்)

அ) குளிர்ந்த மழை ஆ) குளிர்ந்த காற்று

இ) யுகம் ஈ) முறை

(ஆ) 'பந்தர் இளங் கமுகின் பானையும்' 1 ம

(அடிக்கோடிட்ட சொல்லின் பொருளைக் காண்.)

அ) பாக்கு ஆ) சங்கு

இ) முத்து ஈ) பவளம்

8.(அ) 'மலை' எனப் பொருள்தரும் பலசொற்களை எழுதுக. . 1 ம.

அ)கரி,களபம் ஆ) கிரி, வெற்பு

இ) வேங்கை, பறவை ஈ) புணரி, வேலை

(ஆ) 'வேழம்' என்பதன் இருபொருளைக் காண். 1 ம

அ) யானை, கரும்பு ஆ) மூங்கில், சிங்கம்

இ) வேங்கை, புலி. ஈ) வேப்பமரம், சிறுத்தை

9. (அ) 'மூவேந்தர்' - இத்தொகைச்சொல்லை விரித்தெழுதுக. 1 ம.

அ) சேர, சோழ, பாண்டியர் ஆ) மன்னன், வேந்தன், அரசன்

இ) இயல், இசை, நாடகம் ஈ) வேப்பம், ஆலம், நாவல்

(ஆ) 'CULTURE' – எனும் ஆங்கிலச் சொல்லிற்கு நிகரான தமிழ்ச் சொல்லைக் காண். 1 ம

அ) மாறுதல் ஆ) பண்பாடு

இ) மனிதவளம் ஈ) ஊடகம்

10. (அ) படித்தனர்' என்பது எவ்வகை இடம்? காண். 1 ம

அ) தன்மை ஆ)முன்னிலை

இ)படர்க்கை ஈ) செயற்கை

(ஆ) 'தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம்' என்று கூறுதல் எவ்வகை வழு ? காண். 1 ம

அ) திணை ஆ) பால்

இ) இடம். ஈ) மரபு

11. அ) இரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை உள்ள சிறுபொழுதை இவ்வாறு கூறுவர் ? 1 ம.

அ) எற்பாடு ஆ) வைகறை

இ யாமம் ஈ) நண்பகல்

ஆ) இருநாட்டு அரசர்களும் உழிஞைப் பூவைச் சூடிப் போரிடுவதன் நோக்கம் யாது? காண். 1 ம

அ) வலிமையை நிலைநாட்ட ஆ) கோட்டையை முற்றுகையிடல்

இ) ஆநிரை கவர்தல் ஈ) நாட்டைக் கைப்பற்றல்

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. 5×1=5 மதிப்பெண்.

12. புறநானூறு – இச்சொல்லைப் பிரித்து எழுதுக ? 1 ம

அ) புற+நானூறு ஆ) புறம்+நான்கு+நூறு

இ)பு+ற+நூறு ஈ) புற+நா+நூறு

13. . 'தணிந்தது' – இப்பகுபதத்தில் அமைந்துள்ள இடைநிலையைக் காண். . 1 ம

அ) தணி ஆ) த்

இ) அ ஈ) ந்

14. இருவர் உரையாடுவது போன்ற ஓசை எது? காண். 1 ம

அ) அகவல் ஆ) செப்பல்

இ) துள்ளல் ஈ) தூங்கல்

15. 'எட்டு' என்பது எவ்வகை மொழி'. 1 ம

அ) கனிமொழி ஆ)தனிமொழி

இ) தொடர்மொழி ஈ) பொதுமொழி

16. 'வெள்ளம்தீப் பட்டது என வெரீஇப் புள்ளினம்'. 1 ம

(அடிக்கோடிட்ட சொல்லிற்கு இலக்கணக் குறிப்பு காண்)

அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. 9×1=9 மதிப்பெண்.

17. 'வளவன் படம் வரைந்தான்' , - இத்தொடரை எதிர்மறைத் தொடராக மாற்றி எழுதுக. 1 ம

18. 'வந்தார் அண்ணன்' – அடிக்கோடிட்ட சொற்றொடர் எவ்வகைத் தொகாநிலைத்தொடர் ? 1 ம

19. வீசுதென்றல்' என்பது எவ்வகைத்தொகை? 1 ம

20.நேற்று மழை பெய்தது. அதனால் பள்ளிக்கு விடுமுறை. 1 ம

(இத்தொடரைக் கலவைத்தொடராக மாற்றுக)

21.கனிமொழி ஓவியம் வரைந்தாள்' – இச்செய்வினைத் தொடரை செயப்பாட்டு வினைத்தொடராக மாற்றுக ? 1 ம

22. 'சிலை – சீலை' (கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.) 1 ம

23. ஓடி வாருங்கள்! இங்கே ஓடி வாருங்கள்! என்பது எவ்வகைத்தொடர். 1 ம

24. ஒரு எழுவாய் ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலைகளை கொண்டிருக்கும் தொடர் யாது? 1 ம

25. கீழ்க்காணும் பழமொழியை நிறைவு செய்க. 1 ம

ஒரு பானை _____

பகுதி – II

II.உணர்திறன். 20 மதிப்பெண்

கீழ்க்காணும் வினாக்களுக்கு எட்டு முதல் பத்து வாக்கியங்களில் விடையளி. 2×8=16 ம

26. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களை பாராட்டி எழுதுக.

(அல்லது)

சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

27. 'போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

(அல்லது)

'மனிதனால் மாசடையும் நான்' – காற்று கூறுவதை விவரித்து எழுதுக.

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. 2×2=4ம

28. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.
(மேற்காணும் குறட்பாவில் இடம்பெறும் அணியைச்சுட்டி விளக்கம் தருக)

29. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
(மேற்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு எழுதுக.)

பகுதி – III

III. படைப்பாற்றல். 20 மதிப்பெண்

கீழ்க்காணும் வினாக்களுக்கு எட்டு முதல் பத்து வாக்கியங்களில் விடையளி. 2×8 = 16.

30. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன, அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவண செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக.

(அல்லது)

உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

31. 'புதிய நம்பிக்கை' கதையை சுருக்கி எழுதுக.

(அல்லது)

'பிரும்மம்' கதை உணர்த்தும் பிற உயிர்களை தம்முயிர் போல் நேசிக்கும் பண்பினை விவரிக்கவும்.

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. 2×2=4

32. ஆறப்போடுதல் – இம்மரபுத் தொடருக்குப் பொருள் எழுதுக.

33. சிலை மேல் எழுத்துப்போல – இவ்வுவமைத் தொடரை வாக்கியத்தில் அமைக்கவும்.
